Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB MCH (Vascular)
984 10 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MS (Opta) DO MBB
944 4 288784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS DNB
944 5 401793
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R
MBBS MS MCH (Vascular)
988 4 650945
Sr Vascular Surgeon
Dr Salins R
MBBS MD
877 80 87742
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
994 4 100443
Sr ENT Surgeon

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் | சென்னை, 25 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 136

‘பெண்கள், வேலை, சுதந்திரம்’ என முழக்கமிட்டு தலிபான் ஆட்சியை எதிர்த்த ஹெராத் மக்கள்



சென்னை – 25 நவம்பர், 2026 அந்த முழக்கங்கள் ஏற்கெனவே பரிச்சயமானவை. ஆனால், இந்த முறை அவை தெஹ்ரானில் அல்ல, ஹெராத்தில் எதிரொலித்தன.

ஜூன் மாதத்தின் நடுப்பகுதியில், ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள ஹெராத் நகரில் தலிபான்களுக்கு எதிராக அரிதான மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. பெண்களுடன் இம்முறை ஆண்களும் வீதிகளில் அணிவகுத்து, “பெண்கள், வேலை, சுதந்திரம்” என்று முழக்கமிட்டனர். 22 வயதான மஹ்சா அமினியின் மரணத்தைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டு ஈரானில் உருவான “பெண், வாழ்வு, சுதந்திரம்” இயக்கத்தின் தாக்கத்தால் இந்த முழக்கம் உருவாகியிருக்கலாம். ஆப்கானிய பெண் பத்திரிகையாளர்கள் நடத்தும் நாடுகடத்தப்பட்ட ஊடக அமைப்பான ‘ஜான் டைம்ஸ்’ செய்தியின்படி, அண்மைய அடக்குமுறை நடவடிக்கை சில நாள்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டிருக்கலாம். ஜூன் 4ஆம் தேதி, ஹெராத் ஆளுநர் நூர் அகமது இஸ்லாம்ஜார், அறநெறி அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த குழுவினரைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

ஜூன் 5ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்த பிற்பகலில், இஸ்லாமிய ஆடை விதிமுறைகளைப் பின்பற்றாத பெண்கள் கைது செய்யப்படுவார்கள் என்று தலிபான் அதிகாரிகள் அறிவித்தனர். மறுநாள் காலையிலேயே கைது நடவடிக்கைகள் தொடங்கின.